தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **25-11-2015**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் மலரியல் மற்றும் நிலஎழிலூட்டுதலில் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து **8-12-2015** முதல் **31-12-2015** வரையிலான காலத்தில் 'மலரியல் மற்றும் நிலஎழிலூட்டுதல்' பற்றிய பயிற்சி அளித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து தமிழக அரசின் நிதி உதவியைக் கொண்டு இலவசமாக வழங்கப்பட உள்ளது. பயனாளிகள் தமிழக அரசின் தொழில் முனைவோர் நிறுவன விதிகளின்படி தேர்வு செய்யப்படுவர். பயிற்சியாளர்களுக்கு நேரிடையாக நடைமுறைப்பயிற்சி (Hands-on Training) அளிக்கப்படும். இப்பயிற்சியில் கலந்து கொள்ள அடிப்படை கல்வித்தகுதியாக மேல்நிலைப் பள்ளிக் கல்வி (+2) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விருப்பமுள்ள பயனாளிகள் தங்கள் பெயரினை, பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் மற்றும் நிலஎழிலூட்டும் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - **641 003** என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்து கொள்ள இறுதி நாள் **4-12-2015.**

**<u>தொடர்புக்கான முகவரி</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - **641 003.**
தொலைபேசி: 0422-6611230
மின்னஞ்சல்: flowers@tnau.ac.in
அலுவலக நாட்கள்: திங்கள் முதல் வெள்ளி வரை (காலை **9** மணி முதல் மாலை **5.30** வரை)

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்